# இயல் 6.7 - அளவைகள்

பயிற்சி எண் :: 6.7.2.3.F


அளவைகள் -
நேரத்தைக் கணக்கிடும் முறைகள் [ த.நா.அ.பு பயிற்சி 2.3.8 ]

## அளவைகள் - நேரத்தைக் கணக்கிடும் முறைகள் [ த.நா.அ.பு பயிற்சி 2.3.8 ]

ஓர் அஞ்சல் அலுவலகம் முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 5.45 மணி வரை இயங்குகிறது. மதியம் 1 மணி நேரம் உணவு இடைவேளை ஆகும். அஞ்சல் அலுவலகம் வாரத்தில் 6 நாட்கள் இயங்கினால், ஒரு வாரத்தின் மொத்த வேலை நேரத்தைக் கணக்கிடுக.

அஞ்சல் அலுவலகத்தின் தின அலுவல் நேரம்

| துவங்கும் நேரம் | முடிவுறும் நேரம் |
|---|---|




தினப்படி உள்ள அலுவல் நேரம் $\Rightarrow$ 10 மணிக்கும் 5.45 மணிக்கும் இடையில் உள்ள நேரம் = 7:45 மணி

மதிய உணவு நேரம் போக பாக்கி உள்ள நேரம் $\Rightarrow$ 7:45 - 1 = 6:45 மணி

ஒரு வாரத்தில் உள்ள அலுவல் நாட்கள் $\Rightarrow$ 6 நாட்கள்

அவ்வாறெனில் வாரத்தில் உள்ள மொத்த அலுவல் நேரம் $\Rightarrow$ 6:45 $\times$ 6 மணி

= (6 மணி $\times$ 6) + (45 நிமிடம் $\times$ 6)

= 36 மணி + 270 நிமிடம்

= 36 மணி + 4 மணி + 30 நிமிடம்

= 40 மணி + 30 நிமிடம்

அஞ்சல் அலுவலகத்தின் ஒரு வார மொத்த அலுவல் நேரம் **40 மணி 30 நிமிடம்** ஆகும்.

**Information, Rights & Disclaimers** :: Sum & solution prepared on Saturday 27th November, 2021 :: 08:08 Hrs. All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Read :: 4/16/2020 dt. January 31, 2020. https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally well permitted. However, doing so for commercial purpose(s) is/are strictly prohibited.